CS (Main) Exam, 2020

URC-C-TML

# தமிழ் / TAMIL

## (கட்டாயத்தாள்) / (COMPULSORY)

காலஅளவு : மூன்று மணி நேரம்
*Time Allowed :* ***Three Hours***

மொத்த மதிப்பெண்கள் : 300
*Maximum Marks :* **300**

## வினாத்தாளுக்கான விதிமுறைகள்

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும் :**

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

வினா/வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.

விடைகள் **தமிழில் (தமிழ் எழுத்தில்)** மட்டுமே எழுதுதல் வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.

எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.

வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி/பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கேக் கோடு இடவும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*All questions are to be attempted.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in* ***TAMIL (Tamil script)*** *unless otherwise directed in the question.*

*Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.*

*Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

**Q1. பின்வருவனற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 600 சொற்களில் கட்டுரை வரைக.** *100*

(a) இந்தியாவில் ஆரோக்கியப் பாதுகாப்பு முறைகள்

(b) இந்திய விவசாயச் சட்டவிதி (2020) முறைகளின் முக்கியத்துவப் பயன்பாடுகள்

(c) தேசியக் கல்விக்கொள்கை எதிர்நோக்கும் சவால்கள் [NEP] 2020

(d) தற்காலச் சூழலில் செயற்கை அறிவூட்டல் முறையின் பயன்கள்

**Q2. பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்குத் தெளிவாகவும் சரியாகவும் சுருக்கமாகவும் விடை எழுதுக.** *12×5=60*

வாழ்க்கையும் சுற்றுச்சூழலும் இரண்டறக் கலந்துள்ளமையைத் தெளியலாம், குறிப்பாகச் சொன்னால் அனைத்து உயிரினங்களின் வாழ்க்கையும் சுற்றுச்சூழலைச் சார்ந்தேக் காணப்படுகின்றன எனலாம். நம் மனம், உடல், எண்ணங்கள், பலம், செயலாற்றல், நற்குணப்பண்புகள் யாவும் சுற்றுச்சூழலால் உருவாக்கப்பட்டும் காக்கப்பட்டும் ஆக்கம் பெற்றுள்ளன. உண்மையில், வாழ்க்கை, சுற்றுச்சூழல் இவை யாவும் ஒன்றோடொன்று நெருக்கமான தொடர்புடையன மட்டுமின்றி தேவையும் பயனும் உடையதாகவும் உள்ளன.

சுற்றுச்சூழல் என்பது, இயற்கை நமக்கு வழங்கியுள்ள பாதுகாப்பு அரணாகவும் மனிதகுல வாழ்க்கையை வளப்படுத்துவதற்கு நன்மையாகவும் அமைகின்றது.

சுற்றுச்சூழலின் மூலமே இயற்கையிலிருந்து தான் அமைகின்றது. இயற்கை பல்வேறு வகையான தனித்த இயல்புகள் வாய்க்கப் பெற்றதாகும். நிலம், காடுகள், மலைகள், ஆறுகள், நீர் உறைவிடங்கள், பாலைவனங்கள், திறந்த நிலவெளிகள், பள்ளத்தாக்குகள், பலவிதமான அழகான மிருகங்கள், பறவைகள் இவற்றின் கூட்டங்களும் உள்ள, இயற்கையின் சூழலில் ஆறுகளிலும், நீர் உறைவிடங்களிலும் நன்னீர் நிறைந்தும், குளிர் நிறைந்த பகுதிகளில், மேகக் கூட்டங்கள் என அனைத்தும் சுற்றுச்சூழலின் பகுதியாகின்றன. இயற்கையின் பலவிதத்திலுள்ள இத்தகு அமைப்பு மனித வாழ்க்கைக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் அளிக்கவல்ல சிறந்த கொடையாகும். ஆயின் இத்தகு இயற்கையான சுற்றுச்சூழலுக்கு இடையூறுகள் பலவும் விரைவாக ஏற்பட்டுள்ளன. இயற்கையின் வரமான சுற்றுச்சூழல் மனித இனத்தவரால் கண்மூடித்தனமாகவும் எவராலும் ஏற்றுக் கொள்ளாத நிலையிலும் சுற்றுச்சூழலின் முழுமைத் தொகுதியும் சுற்றுச்சூழலின் அமைவும் பாதிப்படைகின்றன, சமநிலை இன்மையும் ஏற்படக் காணலாம். குறிப்பாகத் துருவப் பகுதிகளில் பல நூற்றாண்டுகளாக உறைந்து காணப்பட்ட பனிக்கட்டிகள் உருகும் தன்மையால் அழிவைத்தரவல்ல கடலலைகளால் நகரங்கள் அழிவு எய்தும், மலைகள், காடுகள், மிருகங்கள், சிற்றுயிர்கள் யாவும் அழியும் நாள் வெகு தொலைவில் இல்லை.

சுற்றுச்சூழல் மாசுபடுவதால் அதன் முடிவு நிலையற்ற தன்மையும் நம் மன எண்ணங்களும் செயற்பாடுகளும் குற்றம் நிறைந்ததாகிவிடும் என்பது திண்ணம். இத்தகு சமநிலையற்ற தன்மையால் நிலம், நீர், காற்று மாசடைவதுடன் ஒலி மாசும் ஏற்படும். சுற்றுச்சூழல் மாசுபடுவதால் அதன் பொருட்டு சுவாசம், இதயம், வயிறு தொடர்பான பலவிதமான நோய்கள் ஏற்படலாம். மேலும் பார்வைக்கோளாறு கேட்பொலி, மன அழுத்தம் போன்ற நோய்களும் தாக்கலாம். எனவே மனித வாழ்க்கைக்கு இயற்கையும் அதனோடு பல்வேறு நிலைகளில் தொடர்புடைய சுற்றுச்சூழலும் நிலைத்த தன்மை உடையதாய் அமைய வேண்டும். இந்த மண் உலகு நிச்சயமாகக் தாவரங்களால் மட்டும் சூழப்பெற்று நிறைந்த ஒன்றல்ல. தாவரங்களின் அளவுக்கு இணையாக புல், பூண்டு, தழை இவற்றை உணவாக உண்டு வாழ்கின்ற மிருகங்களும் உண்டு. தாவரங்களை உணவாக உண்டு வாழ்கின்ற மிருகங்களின் எண்ணிக்கை அளவுக்குப் புலால் உண்ணுகின்ற மிருகங்களும் உள்ளன. இவை அனைத்தைபும் நோக்குமிடத்து சரியான விகிதத்திலும் சமநிலையிலும் உள்ளன எனலாம். தற்போதைய முடிவின்படி, அறிவியல் கண்டுபிடிப்புக்கள், தொழில் துறைத் தொடர்பான பணிகள், பலவிதமான வளர்ச்சி விரிவாக்கம், மக்கட்தொகைப் பெருக்கம் இவையாவும் இவற்றோடு இணைந்துள்ளன.

(a) ‘வாழ்க்கையும் சுற்றுச்சூழலும்’ ஒன்றோடொன்று மிகவும் தொடர்புடையன. - விளக்குக. 12

(b) இயற்கை, சுற்றுச்சூழல் இவற்றிற்கிடையே உள்ள தொடர்புகள் யாவை ? 12

(c) சமநிலையிலான இயற்கை சுற்றுச்சூழலை உருவாக்குவது எங்ஙனம் ? 12

(d) சுற்றுச்சூழல் சமநிலையின்மை காரணமாக ஏற்படலாகும் அழிவுகள் யாவை ? 12

(e) சுற்றுச்சூழல் மாசடைதல் காரணமாக ஏற்படுகின்ற நோய்கள் யாவை ? 12

**Q3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி, உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை.** *60*

இந்திய நாட்டின் ஒற்றுமை, சுதந்திரம் இவை இரண்டும் ஒரு படத்தின் இருபக்கங்கள் எனலாம். ஒற்றுமை நிலைக்குக் களங்கம் ஏற்பட்டால் இந்திய நாட்டின் சுதந்திரம் அழிவு நிலையை அடையும் என்பது வெளிப்படை. எனவே தான் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்று ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் உறுதிமொழி செய்தல் வேண்டும், ‘இது முக்கியமானதொரு கடமை உணர்வுமாகும். இந்திய நாட்டில் தேசியத்தை விடவும் மொழி தொடர்பான வழக்கு மிகை. நாம் எதையும் தாங்கிக் கொள்ளும் அடக்கப்பண்பு பெறுவதற்குத் தயாராய் இருத்தல் வேண்டும். நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கு நாம் சில வேளைகளில் அநீதிகளை எதிர் கொள்ளும் நிலையும்

வேண்டும். இந்தியா வலிமைபெற்ற நாடாகவும் நிலைத்த தன்மை உடைய நாடாகவும் விளங்குவதாலும் வெளியே உள்ள சக்திகள் எவையும் நம்மை ஊறுபடுத்த இயலாது என்பதாலும் இவற்றை எல்லாம் பொறுத்துக் கொள்ள வேண்டும். மிகவும் வலிமை பெற்றுள்ள போதிலும் நேர்மைக் கேடாக நாட்டின் ஒரு பகுதி பிறபகுதியுடன் எதிர்த்து நிலை கொள்ள இயலாது. இன்று நம் நாடு நிலைத்த தன்மை உடையதாய் விளங்குவதால் உள்நாட்டுச் சச்சரவுகள் பலவும் முற்றுப் பெற்றுள்ளன. உள்நாட்டில் சச்சரவுகள் முன்னர் போன்று வெறுப்பு மிக்க நிலையும் ஏற்படுத்தும். அத்துடன் மக்களின் பொருளாதாரச் செழிப்புத் தன்மையில் மாற்றம் நிகழவும் அவர்களின் மனப்பான்மையில் மாற்றம் அடையவும் செய்யும்.

நாட்டின் ஒற்றுமைக்கான பாதுகாப்புத் தன்மையில் நம்முடைய பங்களிப்பு இன்றியமையாதது. எனவே தான், போராடிப் பெற்ற சுதந்திரத்தை மனதிற்கொண்டு நாட்டின் உயர்வையும் கொள்கைகளையும் உருப்படுத்த நாம் முயற்சி செய்தல் வேண்டும் இந்தியநாடு சுதத்திரம் பெற்று ஏறத்தாள எழுபத்தி மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டது, இந்நிலையில் நாம் இன்னும் பல்வேறு குறிக்கோள்களை எட்ட வேண்டியுள்ளது. சுதந்திரம் என்பது தேவையான உணவைப் பெறுவது மட்டுமல்ல; திறமையான தொழிற்சாலைகளை நிறுவுவது மட்டுமல்ல. சரியான பார்வையில் சுதந்திரம் என்பது ஆன்ம விடுதலை, சுதந்திரமான தூய்மையான தனி மனித உரிமை என்பதாகும். இது பசியால் வருந்துகின்ற ஒரு மனிதனின் முன் பேசுகின்ற அற்பத்தனமான தத்துவப் பேச்சாகும் எனத் தோன்றலாம்.

இந்தியா என்பது ஒரு புதிய நாடல்ல. இந்தியாவில் வழக்கிலிருந்த பழமையான மொழிகள் இந்திய நாட்டின் சிறந்த பண்பாட்டுக் கலாச்சாரங்களை வெளிப்படுத்தக் காணலாம். இந்திய நாட்டில் உள்ள மிகப் பழமையான நூலில் உலக மக்கள் அனைவரையும் பற்றி கண்டு மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் பல வெளிநாட்டுப் படையெடுப்புகளால் முன்னரே உள்ள அதன் சொந்த நாகரிகப் பண்பாட்டை இழக்கவில்லை. புத்தம் புதிய கண்டுபிடிப்புக்களும் அறிவியல் விஞ்ஞான ஆக்கங்களும் இந்திய நாட்டின் பழமையான பண்பாட்டைக் கொள்ளையடிக்கவில்லை, 250 ஆண்டுகாலச் சரித்திர உண்மை இன்றும் நம் முன்னர் உள்ளது. ஏறத்தாள 6000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல அறிவுக் கூறுகளும் உருப்பெற்றுள்ளமை உண்மைத் தன்மையாகும்.

விஞ்ஞானத் தொழில் நுட்பமுறையின் தொடக்கம் உலகத்தின் பலபாகங்களிலும் உள்ள நாடுகளில் பழைய மதிப்புகளுக்கும் புதிய நோக்குகளுக்கும் இடையே போராட்டத்தை ஏற்படுத்தியது. இன்று உலகநாடுகள் பலவும் பழமையை இழந்துவிடாத முறையில் புதியதுடன் வெற்றிகரமாக இணைந்துள்ளது. இந்தியா பழமைக்கும் புதுமைக்கும் இடையே நெடுங்காலமாக போராட்டம் நடைபெறும் நாடாக உள்ளது. ஆயின், இந்திய நாட்டின் பழமையான அறிவுத்திறன்கள் யாவும் குறைபாடுடையதும் காலங்கடந்தவைகளும் அல்ல. இந்தியாவின் அறிவு நுட்பம் நிகழ்காலத்தைச் சுமந்து கடந்துச் சென்று எதிர்காலத்திற்கு

நகர்ந்து செல்கின்றது. இந்தியா எப்போதும் முன்னேற்றத்தின் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. இந்திய நாட்டில் சான்றோர் பெருமக்களான இராமகிருஷ்ணர், விவேகானந்தர், திலகர், அரவிந்தர் போன்றோர் மிகப் பழமையான அறிவு நுட்பத்தைக் கொண்டவர்கள். இத்தகு அறிவு நுட்பத்தை உட்கொண்டு அதனை நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் எடுத்துச் செல்லும் நிலை உள்ளது. காந்தியடிகளும் பழமை வாய்ந்த சிறந்த மதிப்புக்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். ஆசாரிய வினோபா பாவே அவர்களும் இக்காலத்தையும் எதிர்காலத்தையும் கடந்தகாலம் வழி சிந்தித்துள்ளார். ரவிந்திரநாத் தாகூர் பழமையான அறிவு நுட்பங்களுக்கு மிகப்பெரும் அளவில் ஆதரவு அளித்துள்ளார். நாம் அனைவரும் இன்றும் கூட பழமையை விட்டுவிடவில்லை. பழமை என்பது விலைமதிப்பு மிக்க நம் முதாதையர்கள் விட்டுச் சென்ற பாரம்பரியச் சொத்தாகும்.

*(400 சொற்கள்)*

**Q4. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதுக.** *20*

வாழ்க்கை என்பது உண்மையில் மிகவும் கவனத்திற்குரித்தான ஒன்று. இதில் கவனக்குறைவு நேரிடுமாயின் அது நாம் நடந்து செல்லும் போது பெரும் பள்ளமான குழியிலோ நீர்த்தேங்கிக் காணப்படுகின்ற தூய்மை

அற்ற குழியிலோ விழுவது போன்றதாகும். இந்த உண்மை முன்னேற்றமான அறிவியல் பயன்பாட்டிற்கும் பொருந்துவதாகும். விஞ்ஞான அறிவியலை மனிதகுல நன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் பயன்படுத்தினால் அதன் பயனைக் குறித்து எவரும் குறை கூறுவதில்லை. அறிவியலை அழிவுக்குப் பயனாக்கினால் அது நிச்சயமாகத் துன்பத்தைத் தருவதுடன் மனிதகுலம் முழுவதும் வெறுக்கத்தக்க ஒன்றாகிவிடும். அறிவியல் நமக்குப் பல்வேறு நிலைகளில் பொருள் சார்ந்த வசதிகளையும் நன்மைகளையும் தந்தாலும் அதன் ஊறு விளைவிக்கும் ஆற்றல் காரணமாக மனதிற்கு மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் தருவதில்லை. பொருள்களின் பெருக்கம், மனித வாழ்க்கையில் விரைவையும் இயந்திர நிலையையும் ஏற்படுத்தியதால் மனித மனங்களில் சமாதானத்தையும் அமைதியையும் மகிழ்ச்சியையும் இழக்கச் செய்ததுடன் அறமதிப்புகள், மனிதநேயம் இவையாவும் அழிந்தன. மனித இனம் அறிவியலைத் தவறாகப் பயன்படுத்தியதால் மிகப்பெரிய அழிவுக்கும் வகைவகுத்தது. அறிவியலின் கண்டுபிடிப்பாலே தான் அழிவுக்குக் காரணமான கொடிய ஆயுதங்கள் உருவாக்கப்பட்டன.

அறிவியலை இயற்கையோடு இணைந்த நிலையில் மனிதர்கள் பயன்படுத்த வேண்டும். அறிவியல் என்பது மனித வாழ்க்கையில் பல்வேறு நன்மைகளுக்கும் பயன்பாடு உடையதாகும் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

**Q5.** **பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்க.** *20*

One of India's greatest musicians was M.S. Subbulakshmi, affectionately known to most people as 'MS'. Her singing brought joy to millions of people not only in all parts of our country, but in other countries around the world as well. In October 1966, MS was invited to sing in the great hall of the General Assembly of the United Nations in New York, while representatives of all the member countries listened. This was one of the greatest honours ever given to any musician. For several hours MS kept that international audience spellbound with the beauty of her voice and her style of singing; when the concert was over, the entire audience stood up and clapped as a sign of their appreciation of not only the singer but of the great music that she had carried with her from an ancient land. India could not have had a better ambassador. MS was the first musician ever to be awarded the 'Bharat Ratna', India's highest civilian honour. She was the first Indian musician to receive the Ramon Magsaysay Award in 1974 with the citation reading "exacting purists acknowledge Shrimati M.S. Subbulakshmi as the leading exponent of classical and semi-classical songs in the Carnatic tradition of South India".

**Q6.** (a) **கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக :** *2×5=10*

(i) பொன் *2*

(ii) மாலை *2*

(iii) நறை *2*

(iv) கானம் *2*

(v) வீறு *2*

(b) **பின்வரும் இணைகளின் பொருள் வேறுபாடு புலப்படுமாறு ஏற்ற சொற்றொடர்களில் அமைத்து எழுதுக :** *2×5=10*

(i) தின்மை - திண்மை *2*

(ii) வழி - வளி *2*

(iii) அழை - அளை *2*

(iv) குறுக்கு - குருக்கு *2*

(v) கோள் - கோன் *2*

(c) **பிரித்தெழுதுக :** *1×5=5*

(i) ஐந்திணை *1*

(ii) குடும்ப உறவு *1*

(iii) பதினாயிரம் *1*

(iv) பெற்றோர் *1*

(v) முகக்கவசம் *1*

(d) **எதிர்ச்சொற்கள் தருக :** *1×5=5*

(i) அரிது *1*

(ii) நிகழ்காலம் *1*

(iii) மறம் *1*

(iv) மறைதல் *1*

(v) வாணாள் *1*

(e) **எதிர்மறை வாக்கியமாக மாற்றுக :** *1×5=5*

(i) இரவில் கடுமையாக மழை பெய்தது. *1*

(ii) அவன் வகுப்பிற்கு ஒழுங்காக வரமாட்டான். *1*

(iii) அப்பா எப்போதும் கோபப்படுவார். *1*

(iv) புத்தகங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்படவில்லை. *1*

(v) மது அருந்துதல் உடல் நலத்தைப் பாதிக்கும். *1*

(f) **பிழை நிக்கி எழுதுக :** *1×5=5*

(i) குறளில் மேலான்மைச் சிந்தனைகள் மிகை. *1*

(ii) அமைச்சர் பெறுந்தகை வந்தார். *1*

(iii) புஞ்செய் நிலங்கள் உள்ளன. *1*

(iv) ஊளல் செய்தல் குற்றம். , *1*

(v) அறிவு அத்தம் காக்கும் கருவி. *1*